# போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்தது

## அரச தரப்பிலிருந்து சாதகமான சமிக்ஞை வந்ததாம்!

மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று பிற்பகலில் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்திடம்இருந்துகிடைத்தசாதகமானபதில் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

தொடர் போராட்டத்தின் அங்கமாக, வடமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இன்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார அமைப்பின் வீழ்ச்சியைத் தணிக்க, நாட்டில் வைத்தியர்களைத் தக்கவைக்க அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்க தவறியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச வைத்திய2➤


# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை 03.11.2023 கதிர் 106



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!

A new brand from Jaffna!

பூ ஆடை

PooAadai

ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## கிளிநொச்சியிலும் மருத்துவர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க வைத்தியசாலைகளின் வைத்தியர்களும் இன்றைய தினம் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் சிகிச்சைக்காக தூரப் பிரதேசங்களில் இருந்து வந்த வெளிநோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், அவசர தேவை கருதி, அவசியப்படும் நோயாளர்கள் விடுதி யில் அனுமதிக்கப்படுவதாகவும் வைத்திய சாலைத் தகவல்கள் கூறுகின்றன.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் தெரிவிக்கையில், தற்பொழுது நாட்டில் இருந்து வெளியேறும் வைத்தியர்களின் தொகை மிக அதிகளவில் அதிகரித்து வருவதால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அரசாங்கத் தரப்பில் நாட்டிலிருந்து வெளியேறும்வைத்தியர்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை.

இந்நிலை தொடருமாயின் இலங்கையில் மருத்துவ சேவையை முற்று முழுதாக முன்னெடுக்க முடியாத அபாய நிலை ஏற்படப்போகிறது.

இது தொடர்பாக அரசாங்க தரப்பினர் உரிய நடவடிக்கையின் மேற்கொண்டு வைத்தியர்களின் நலன் தொடர்பாகவும், நாட்டில் இருந்து வெளியேறும் வைத்தியர்களைத் தடுக்க உரிய நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்2➤

## வடக்கில் இன்று வைத்தியசாலைகள் முடக்கம் வைத்தியர்கள் அடையாளப் பணிப்புறக்கணிப்பு






வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் இன்று காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நாளை காலை 8 மணி வரை முன்னெடுக்கப்படும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருந்த போதிலும் அரசிடமிருந்து கிடைத்த சாதகமான பதில்களால் பணிப்புறக் கணிப்பை தற்காலிகமாக கைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள2➤

## லிட்ரோ காஸ் விலை உயர்வு

நாட்டில் மீண்டும் லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் இந்த அறிவித்தலை இன்று விடுத்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல்எரிவாயு கொள்கலனின் விலையை 70 - 90 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் அதிகரிக்கத் தீர்மானிக்2➤

## யாழ்ப்பாணத்தில் களமிறங்கிய நிர்மலா



இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம்மேற்கொண்ட இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்று யாழ்ப்பாணம் வந்தார்.

முற்பகல் 10.15 மணியளவில் இந்திய நிதி உதவியில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தைப் பார்வையிட்ட அவர், பாடசாலை மாணவர்களின் கண்டுபிடிப்புக்கள் அடங்கிய கண்காட்சியையும் பார்வையிட்டார். மேலும் கலாசார மண்ட சரஸ்வதி அரங்கில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்விலும் அவர் கலந்துகொண்டார்.

இதன்போது இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தைப் பார்வையிட்ட அவர், அங்குள்ள சரஸ்வதி, வள்ளுவர் சிலைகளுக்கும் மாலையிட்டு மரியாதை2➤

## ஊவா மாகாணப் பணிப்புறக்கணிப்பால் நோயாளருக்கு பாரிய அசௌகரியங்கள்

### நேற்று அரச மருத்துவமனைகளில் தவிப்பு

மாகாண மட்டத்திலான தொழிற்சங்க நடவடிக்கையை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ள நிலையில், இன்றைய தினம் இரண்டாம் நாள் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

பணிப்புறக்கணிப்பின் முதலாம் நாளான நேற்றைய தினம் ஊவா மாகாணத்தில் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

நாட்டில் இருந்து வெளியேறும் வைத்தியர்களை தக்கவைப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் பல்வேறு விடயங்களை முன்னிறுத்தி இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்தில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு காரணமாக நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முக்கிய ஆவணங்கள் அழிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு

### அரச மருந்தாளர் சங்கம் முன்வைப்பு

தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக் குழுவின்பல முக்கிய ஆவணங்கள்அழிக்கப்பட்டுள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த ஆவணங்களை அழிப்பதில் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் குணசேகரவின் பங்கு இருப்பதாக அரச மருந்தாளர் சங்கத் தலைவர் துஷார ரணதேவ குற்றம் சுமத்தியுள்ளார்.

தலைமை நிறைவேற்று அதிகாரி, ஆணைக்குழு அலுவலகத்துக்குள் பிரவேசித்து சில கோப்புகளை அகற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மருந்துகள்ஒழுங்குபடுத்தல்ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் தற்போதைய பிரதம2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## மலையக மக்களைக் கைவிட மாட்டோம்

# தொடர்ந்து குரல் கொடுப்போம் என அண்ணாமலை தெரிவிப்பு

இலங்கையில் வாழும் மலையக மக்களுக்கும் இந்தியாவில் வாழும் மலையக மக்களுக்கும் பாரதிய ஜனதா கட்சி என்றும் ஆதரவாக இருக்கும். அவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம் என பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ அரங்கில நேற்று இடம்பெற்ற 'நாம் 200' தேசிய நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 'நாம் 200' என்பது கடுமையான பாதைகளை நினைவுபடுத்துகிறது. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த மலையக மூதாதையர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை உருவாக்கி நாட்டை வளப்படுத்தினார்கள்.

கடின உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் போராட்டம் ஆகியவற்றை மூலதனமாக கொண்டு மலையக மக்கள் இந்த 200 ஆண்டுகாலத்தை நிறைவு செய்துள்ளார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பல துயரங்களை அனுபவித்த மக்கள் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டதன் பின்னரும் அரசியல் ரீதியில் பிரித்தாளப்பட்டார்கள்.

சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தினால் சுமார் 3 இலட்சம் மலையக தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் குடியேறி புதிய வாழ்க்கையை வாழ ஆரம்பித்தார்கள்.

இந்த 200 ஆண்டு காலத்தில் உலகில் வேறெந்தவொரு இனமும் இவ்வாறானதொரு நிலையை எதிர்கொள்ளவில்லை. தனி வீடு வேண்டும் என்பது பெருந்தோட்ட மக்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது. இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மலையகத்தில் இந்திய வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் இந்த திட்டம் நிறைவுபடுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம். பெருந்தோட்ட மக்களுக்கு சொந்த வீட்டுடன் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் உறுதியளித்துள்ளதை வரவேற்கிறோம்.

2017ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நுவரெலியா மாவட்டத்துக்குச் சென்று அங்கு வாழும் மலையக மக்களை சந்தித்து உரையாடினார்.

பெருந்தோட்ட மக்களின் உழைப்பு மற்றும் விடாமுயற்சியை பிரதமர் நரேந்திர மோடி வியந்து பார்த்து அதனை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக கொண்டார்.

இலங்கையில் உள்ள மலையக மக்களுக்கும் இந்தியாவில் வாழும் மலையக மக்களுக்கும் பாரதிய ஜனதா கட்சி ஆதரவாக இருக்கும். அவர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம். – என்றார். (அ)

### போராட்டத்தை தற்காலிகமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் சங்கம் மாகாண மட்டத்தில் இந்த பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்திருந்தது. (க)

### கிளிநொச்சியிலும்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் வலியுறுத்தினர்.

2016 ஆண்டு தொடக்கம் வைத்தியர்களுக்கு வழங்கப்படவேண்டிய மேலதிகக் கொடுப்பனவு இது வரையில் வழங்கப்படவில்லை. இதனை தற்பொழுதாவது வழங்கவேண்டும். இன்று ஆரம்பித்த அடையாளப் போராட்டத்தை பிற்பகல் 2 மணியுடன் நிறைவு செய்துள்ளதாகவும், ஆயினும் வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தராவிட்டால் மீண்டும் போராட்டத்தில் இறக்க நேரிடும், எனவும் அவர்கள் தெரிவித்தனர். (02)

### வடக்கில் இன்று........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் இடம்பெறவில்லை. மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் மாத்திரம் இடம்பெற்றன.

இதேவேளை, யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை முன்பாக இன்று காலை ஒன்றுகூடிய வைத்தியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

"திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமைகளில் கை வைக்காதே", "முறையற்ற வரி, சம்பள வெட்டு மூலம் வைத்தியர்களைத் துரத்தாதே", "அடிப்படை மருந்து உபகரணங்களை உறுதிப்படுத்து" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்தியர்கள் தாங்கியிருந்தனர். (அ)

### யாழ்ப்பாணத்தில் களமிறங்கிய.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தினார்.

பின்னர் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இந்திய நிதி உதவியில் அமைக்கப்பட்ட இந்தியன் கோனரையும் அவர் பார்வையிட்டார். அங்குள்ள முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் சிலைக்கும் அவர் மாலையிட்டு மரியாதை செலுத்தினார்.

முற்பகல் 11.15 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் அவர் கலந்துகொண்டார்.

இதன்போது அங்கு கூடியிருந்தவர்களிடம் நல்லூர் கந்தசுவாமி கோயில் பூசகரின் பெயர் என்ன என்று கேள்வி எழுப்பினார். அங்கிருந்தவர்கள் வைகுந்த குருக்கள், பிரசன்னா குருக்கள் என்றனர்.

அதன் பின்னர் பிரசன்னா குருக்கள் உலகளவில் தற்போது ஹீரோ என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். ஆலய மஹோற்சவத்தின் போது கட்டியம் கூறுவதையும் புகழ்ந்து பாராட்டினார்.

பிற்பகல் 12.20 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இந்திய அரச வங்கிக் கிளையையும் நிர்மலா சீதாராமன் திறந்துவைத்தார். (அ)

## கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா இன்றைய தினம் சிறப்புற நடைபெற்றது





வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களங்களின் அனுசரணையில், கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்திய இந்தப் பெருவிழா காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியிருந்தது.

மாவட்ட அரசாங்க அதிபரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான றூபவதி கேதீஸ்வரன் ன் தலைமையில் விழா நடைபெற்றது. கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

மேற்படி விழாவில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழிநுட்பப் பீடத்தின் பீடாதிபதி சிவமதி சிவச்சந்திரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அமரர் கலைக்கிளி செல்வி நடனவதி முருகேசு அரங்கு என்ற பெயரில் அமைந்த அரங்கின் திறப்புரையைக் கண்டாவளைப் பிரதேசக் கலைஞர் கவிஞர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்தினார்.

கிளிநொச்சி மாவட்டப் பிரதேச செயலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (02)

### தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரியுமான வைத்தியர் விஜித் குணசேகர, அண்மைக் காலமாக தரம் குறைந்த மருந்துகளின் வருகை தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

### லிட்ரோ காஸ் விலை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.


அத்துடன், இந்த விலை அதிகரிப்பு நாளை முதல் அமுலாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்



# ARL IT HUB இன் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் புத்தாக்கத் திருவிழாவும் கண்காட்சியும் ஆரம்பம்




தொழில் முனைவோர், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கல்வி ஆர்வலர்கள் அல்லது புதிய விடயங்களில் ஆர்வமுடையவர்களுக்கான ஒரு தனித்துவம் வாய்ந்த கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இன்று முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

YARL IT HUB இன் Innovation Festival என்ற கண்காட்சியும் கலந்துரையாடல்களும் போட்டிகளும் கொண்ட இந்த நிகழ்வு இன்று யாழ்ப்பாணக் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது.

மாணவர்களின் புத்தாக்கங்களையும் கண்டுபிடிப்புகளையும் கொண்ட கண்காட்சியும் இந்தப் புத்தாக்கத் திருவிழாவின் ஒரு பகுதியாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# அம்பாறை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 34 ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்

(நூருல் ஹுதா உமர்)

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்டத்தினது 34ஆவது மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டுப் போட்டி அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் முபாரக் அலி தலைமையில் இம்மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை சுவட்டு மைதான நிகழ்ச்சிகளாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது, அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் 20 பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற விளையாட்டு வீர, வீராங்கனைகளின் பங்கேற்புடன் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் வெற்றி பெற்று, முதலாம் இடங்களைப் பெறும் இளைஞர் விளையாட்டு வீர, வீராங்கனைகள் 34 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு புதிய மேலதிக மாவட்டப் பதிவாளர் நியமனம்



(எம்.எப். நவாஸ்)

நிந்தவூர்பிரதேச செயலகத்தின் புதிய மேலதிக மாவட்டப் பதிவாளராக கல்முனை காணிப் பதிவகத்தில் மாவட்டப் பதிவாளராக கடமை புரிந்த அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகவும், நிந்தவூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜே.முகம்மட் பைறுஸ் பதவியேற்றுக்கொண்டார்.

இப்பதவியேற்பு வைபவத்தில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.அப்துல் லத்தீப், மற்றும் உதவி பிரதேச செயலாளர், செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்முனை காணிப் பதிவகத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் வாசிப்பு மாதம் மற்றும் நூலக வாரம்

## நடமாடும் நூலகமும் திறக்கப்பட்டது!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அரசாங்க சுற்று நிருபத்திற்கு அமைய நூலக வாரத்தினை முன்னிட்டு,

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி "நினைத்த இடத்திற்குச் செல்லவும் வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்" எனும் தொனிப்பொருளில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் நூலகப் பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் பச்சை வீடு இடத்தில் மிக சிறப்பான நெறிப்படுத்தலில் நடைபெற்ற நடமாடும் நூலகத்திறப்பு நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

நடமாடும் நூலகத்தில் சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப் பரப்புடன் தொடர்பான நூல்கள், செய்திப் பத்திரிகைகள், கவிதைகள், சஞ்சிகைகள் என பல்துறைசார்ந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இடைவேளை நேரத்தில் கல்லூரிச் சமூகத்தினர் பயன்பெறும் வகையில் வாசிப்பினை மாணவர் மத்தியில் சமூக மயப்படுத்துவற்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் அவர்களினால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி அதிபர்களான ஏ.எச்.நதிரா, என்.டி நதீகா, எம்.எஸ்.மனூனா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் எனப் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

# பெப்ரவரியில் பொதுத் தேர்தல்!

## பாகிஸ்தான் தேர்தல் ஆணையம்




பாகிஸ்தானின் அடுத்த பொதுத் தேர்தலின் வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அந்த நாட்டின் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் ஷாபாஸ் ஷெரீஃப் தலைமையில் நடைபெற்று வந்த முஸ்லிம் லீக் (என்) கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சி, நாடாளுமன்றத்தின் ஆயுள் காலம் நிறைவடைவதற்கு மூன்று நாள்கள் முன்னரே கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி கலைக்கப்பட்டது.

பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அடுத்த பொதுத் தேர்தல் 90 நாள்களுக்குள் நடத்தப்பட வேண்டும் என்றாலும், அங்கு இந்த ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுவரையறை நிறைவடையாததால் தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதில் தேர்தல் ஆணையம் தாமதித்து வந்தது.

இந்நிலையில், தொகுதி மறுவரையறையின் முதல்கட்டப் பட்டியல் செப்டெம்பர் 27 ஆம் திகதியும், இறுதிப் பட்டியல் நவம்பர் 30 ஆம் திகதி வெளியிடப்படும். அதன் பின்னர் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஜனவரி கடைசி வாரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் கடந்த செப்டம்பர் மாதம் கூறியிருந்தது.

எனினும், சரியான தேர்தல் திகதியை ஆணையம் அறிவிக்க வேண்டும் என அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வந்தன.

இந்த நிலையில், வரும் பெப்ரவரி 11 இல் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று உச்சநீதிமன்றத்திடம் தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை தெரிவித்தது. இதையடுத்து, தேர்தல் திகதி குறித்து நிலவி வந்த குழப்பம் முடிவுக்கு வந்துள்ளது. (04)

# காஸாவிலிருந்து 7,000 வெளிநாட்டினரை மீட்க ஆயத்தம் - எகிப்து அறிவித்தது!



இஸ்ரேலால் முற்றுகையிடப்பட்டு, கடுமையான தாக்குதலுக்குள்ளாகியுள்ள காஸா பகுதியிலிருந்து 7,000 வெளிநாட்டினரை மீட்க ஆயத்தமாகி வருவதாக எகிப்து அறிவித்துள்ளது.

அந்தப் பகுதியிலிருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் மற்றும் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் ராஃபா எல்லை வழியாக தங்கள் நாட்டுக்குள் முதல்முறையாக அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பை எகிப்து வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸாவிலிருந்து சுமார் 7,000 வெளிநாட்டினரை ராஃபா எல்லை வழியாக வரவேற்ற ஆயத்தமாகி வருகிறோம்.

60 க்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் கடவுச் சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கும், இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களுக்கும் மட்டும் எகிப்துக்குள் வர அனுமதி அளிக்கப்படும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே காஸாவிலிருந்து 361 வெளிநாட்டினர் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளனர். 3 வார காலமாக காஸாவில் நடைபெற்று வரும் மிகக் கடுமையான போரிலிருந்து தப்பி வந்த அவர்களில் ஒஸ்திரியா நாட்டைச் சேர்ந்த 31 பேர், 5 பிரான்ஸ் நாட்டவர்கள், 4 இத்தாலியர்கள், இலங்கையர், ஜெர்மானியர்கள் இடம்பெற்றிருந்தாக அந்தந்த நாடுகளின் அரசுகள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், காஸாவிலிருந்து மேலும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டினர் எகிப்துக்குள் வியாழக்கிழமை அழைத்துவரப்பட்டனர். அன்று மட்டும் சுமார் 400 பேரை அனுமதிக்க எகிப்து அரசு ஒப்புக்கொண்டுள்ளது. அதற்காக எகிப்தின் அவசரகால ஊர்திகள் ராஃபா எல்லைப் பகுதியில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த 400 பேரும் 44 நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும், காஸாவில் செயல்பட்டு வரும் ஐ.நா. பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு தொண்டு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலின் கடுமையான முற்றுகைக்கு உள்ளாகியிருந்த காஸாவுக்குள் சர்வதேச நாடுகளின் தீவிர முயற்சிகளுக்குப் பிறகு நிவாரணப் பொருள்கள் செல்ல அவ்வப்போது அனுமதிக்கப்பட்டு வந்தது. எனினும், அங்கிருந்து யாரும் வெளியேற அனுமதிக்கப்படாமல் இருந்து வந்தது. காஸாவில் இருந்து வரும் அகதிகளை ஏற்க எகிப்தும் தயக்கம் காட்டி வந்தது.

இந்த நிலையில், காஸாவில் சிக்கியுள்ள வெளிநாட்டினரை மீட்பதற்காக அவர்களது நாடுகள் மேற்கொண்ட தூதரக முயற்சியின் பலனாக, அவர்களை தங்கள் நாட்டுக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அனுமதிக்க எகிப்து ஒப்புக்கொண்டது.

அதன்படி ராஃபா எல்லையைக் கடந்து முதல்முறையாக சுமார் 400 பேர் வந்துள்ள நிலையில், மேலும் 7,000 வெளிநாட்டினரை காஸாவிலிருந்து வரவேற்கத் தயாராகி வருவதாக எகிப்து தற்போது அறிவித்துள்ளது. (04)

# அன்டார்டிகாவில் புதிய ஆய்வுத் தளம் அமைப்பதற்குச் சீனா திட்டமிட்டுள்ளது



அன்டார்டிகாவில் புதிய ஆராய்ச்சி மையம் ஒன்றைக் கட்டியெழுப்ப சீனா திட்டமிட்டு உள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

ராஸ் கடலின் கடலோர பகுதியில் ஐந்தாவது ஆராய்ச்சி மையத்திற்கான கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தப் பணியை வருகிற 2024 ஆம் ஆண்டு பெப்ரவரிக்குள் நிறைவு செய்வது என சீனா திட்டமிட்டு இருக்கிறது. இதனை அந்நாட்டில் இருந்து வெளிவரும் குளோபல் டைம்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்காக 80 சீன மையங்களை சேர்ந்த 460 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் அடங்கிய சரக்குக் கப்பல் ஒன்றும் செல்லவிருக்கிறது. இந்தக் கட்டுமானப் பணியுடன் கூடவே அன்டார்டிகாவின் சுற்றுச்சூழலில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட கூடிய பாதிப்புப் பற்றியும் ஆராய்ச்சிக் குழு ஆய்வு மேற்கொள்ளும்.

இதேபோன்று, உலகளாவிய பருவநிலை மாற்றத்தில் இந்தப் பகுதியின் பங்கு பற்றியும் ஆய்வு நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு அன்டார்டிகாவில் அமையவுள்ள புதிய தளத்துடன் செயற்கைக்கோள் நிலையம் ஒன்றும் மற்றும் கண்காணிப்பகமும் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (04)

# இஸ்ரேல் தரைவழித் தாக்குதல் தீவிரம் காஸா சிட்டியை நோக்கி முன்னேறியது



காஸாவுக்குள் தரைவழித் தாக்குதல் நடத்தி முன்னேறி வரும் இஸ்ரேல் அந்தப் பகுதியின் தலைநகரான காஸா சிட்டியை நோக்கி மேலும் முன்னேறியுள்ளது.

பீரங்கிகள் மற்றும் கவச வாகனங்களில் காஸாவுக்குள் நுழைந்துள்ள இஸ்ரேல் ராணுவம், கடந்த ஒரு வாரமாக ஹமாஸ் நிலைகளை அழித்தவாறே படிப்படியாக முன்னேறி வருகிறது.

ஹமாஸின் கோட்டையாகத் திகழும் தலைநகர் காஸா சிட்டியை நோக்கி ராணுவம் வியாழக்கிழமை மேலும் முன்னேறியுள்ளது.

எனினும், அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ஹமாஸ் படையினர் மிகக் கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

சுரங்கத் தளங்களில் இருந்து திடீர் திடீரென வெளியே வந்து தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் செல்லும் பாணியைப் பின்பற்றி இஸ்ரேல் படையினருக்கு அவர்கள் கடும் நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

ஹமாஸ் படையினருடன் தற்போது நடைபெற்று வரும் சண்டையில் இதுவரை தங்கள் ராணுவத்தைச் சேர்ந்த 18 வீரர்கள் உயிரிழந்ததாக இஸ்ரேல் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது. (04)

# ஈரானில் அபாயகரமான வீதத்தில் மரண தண்டனைகள் நிறைவேற்றம்

## ஐ.நா. பொதுச் செயலாளர் வேதனை



ஈரான் நாட்டில் அபாயகரமான வீதத்தில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதாகவும், நடப்பு ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் குறைந்தது 419 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளதாகவும் ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சிறிய தவறுகளுக்கும் பெரிய தண்டனைகளைக் கொடுக்கக்கூடியவையாக அரபு நாடுகள் உள்ளன. ஈரானில், 22 வயது மாஷா அமினி என்ற இளம்பெண், அந்நாட்டின் இஸ்லாமிய ஆடைக் குறியீட்டை மீறியதாகக் கூறப்படும் தலைக்கவசத்தைத் தளர்த்தியதற்காக காவலர்களால் கைது செய்யப்பட்டார். அவரது மரணம் அந்நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நாடு தழுவிய போராட்டங்கள் நடைபெற்றன. அதில் பங்கேற்றதற்காக ஏழு பேர் தூக்கிலிடப்பட்டதாக ஐ.நா பொதுச்செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் நீதித்துறை நடவடிக்கைகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் நியாயமான விசாரணை நடைபெறவில்லை என்றும், உரிய நடைமுறைள் பின்பற்றப்படவில்லை என்றும் குட்டெரெஸ் தெரிவித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சரியான நேரத்தில் சட்ட அணுகல் நிராகரிக்கப்பட்டதாகவும், சித்ரவதை காரணமாக ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறப்பட்டிருக்கலாம் என்றும் அவரது அறிக்கை கூறுகிறது.

கடந்த 7 மாதங்களில் தூக்கிலிடப்பட்ட 239 பேரில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலத்தோடு ஒப்பிடும்போது 30 வீதம் அதிகமாகும்.

மாஷா அமினி மரணத்தை அடுத்து, செப்டம்பர் 17, 2022 முதல் பெப்ரவரி 8, 2023 வரையிலான காலகட்டத்தில் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றதற்காக 20,000 பேர் கைது செய்யப்பட்டதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தகவல் திரட்டி உள்ளதாக ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படையின் துணைத் தளபதியின் கூற்றுப்படி, கைது செய்யப்பட்டவர்களின் சராசரி வயது 15 என மதிப்பிடப்பட்டிருப்பதால், கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகளாக இருக்கலாம் என குட்டரெஸ் அச்சம் தெரிவித்துள்ளார். போராட்டங்களின்போது கைது செய்யப்பட்ட 22,000 பேர் மன்னிக்கப்பட்டதாக அரசு கூறினாலும், அவர்கள் வேறு காரணங்களுக்காக மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ஈரான் அரசு கூறுவதை உறுதிப்படுத்துவது கடினம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மரண தண்டனைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும், மரண தண்டனையை ரத்துச் செய்ய வேண்டும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து மக்களையும் விடுவிக்க வேண்டும், பெண்கள் மற்றும் சிறுமிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட அனைவரும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமைகளை சட்டபூர்வமாக பயன்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஈரானை, ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் வலியுறுத்தி உள்ளார். (04)

# திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கான நட்ட ஈடு ஓய்வூதியத் திட்ட விவசாயிகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கல்



(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுக் காசோலையும் மற்றும் புதிதாக விவசாய ஓய்வூதிய திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயிகளுக்கான பற்றுச்சீட்டுகளும் வழங்கும் நிகழ்வானது நேற்று திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகம், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் ஊடாக 2022, 2023 பெரும்போகத்தில் பயிர்க் காப்புறுதி செய்த மற்றும் அரசினால் வழங்கப்படுகின்ற மானியக் காப்புறுதியினூடாகவும் வெள்ளம், வரட்சி, யானை அழிவு, நோய்களும் பீடைகளினாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நட்ட ஈட்டு கொடுப்பனவுக் காசோலையும், புதிதாக விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயி-களுக்கான பற்றுச்சீட்டும் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 736 விவசாயிகளுக்கான 22.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 47 விவசாயிகளுக்கான காசோலை இன்று வழங்கப்பட்டதுடன் மீதமாகவுள்ள விவசாயிகளின் நட்ட ஈட்டுக் கொடுப்பனவு அவர்களின் வங்கி கணக்கின் வரவில் வைப்பில் இடப்பட்டுள்ளது என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை உதவிப் பணிப்பாளர் கே.எல்.அன்சார் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக விவசாயப் பணிப்பாளர் கருணைநாதன், கமநல சேவைகள் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மாவடிப்பள்ளி பாதுகாப்பற்ற பாலத்தினூடாக பயணிப்பதில் பொதுமக்களுக்கு இன்னல்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாவடிப்பள்ளி - காரைதீவு பிரதான வீதியிலிருந்து சாய்ந்தமருது பொலிவேரியன் வீடமைப்பு திட்டப்பகுதிக்கு கரைவாகு வட்டையினூடாக செல்லும் வீதி ஆரம்பிக்கும் இடத்திலுள்ள பாலத்தின் இரு பக்கங்களிலுமுள்ள பாதுகாப்புத்தூண்கள் சேதமடைந்து பல மாதங்கள் கடந்தும் இதுவரை திருத்தப்படாமலுள்ளதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பாலத்தை சாய்ந்தமருது மற்றும் கல்முனைக்குடிக்கு செல்லும் பொதுமக்களும் விவசாயிகளும் பயன்படுத்தி வருகின்றனர்.

தினசரி உழவு இயந்திரங்கள், மாட்டு வண்டிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இப்பாதுகாப்பற்ற பாலத்தினூடாக பயணிப்பதால் பலவிதமான சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.




## 200 மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

(வி.ரி. சகாதேவராஜா)



கல்முனை ரோட்டறிக்கழகத்தின் 200 மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட 58 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கழகத்தலைவர் ரொட்டேரியன் ஏ.எல்.ஏ. நாசர் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தரக் கல்லூரி மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் பாடசாலை அதிபர் எஸ்.கலையரசன், கழகத்தின் முன்னாள் தலைவர்கள் ரொட்டேரியன் எஸ்.புஷ்பராசா, ரொட்டேடரியன் மு. சிவபாதசுந்தரம், ரொட்டேரியன் வி.விஜயசாந்தன், ரொட்டேரியன் ந.றதீசன் மற்றும் ரொட்டேரியன் எம்.அமிர்தசங்கர் ஆகியோரும் பங்குபற்றினர்.

## கல்முனை ரஹ்மத் பவுண்டேசனினால் புனித அல்–குர்ஆன் பிரதிகள் அன்பளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கிறீன்பீல்ட் முஹ்யித்தீன் மஸ்ஜிதினால் நடாத்தப்பட்டு வருகின்ற கிறீன்பீல்ட் “காதிரிய்யா” குர்ஆன் மத்ரஸாவில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களின் நலன் கருதி பள்ளிவாசல் நிருவாகிகள் மாணவர்களுக்கான குர்ஆன் வசதி-களைப் பெற்றுத்தருமாறு ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை.டபிள்யு. எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில், கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரினால் 70 மாணவர்களுக்கான புனித அல்-குர்ஆன் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது முஹ்யித்தீன் மஸ்ஜிதினுடைய நிருவாகிகளான தலைவர் ரீ.ஏ.மஜீத், செயலாளர் எம்.எச்.ஏ.கரீம், பொருளாளர் ஏ.எம். றியாஸ், நிருவாக உறுப்பினரான எம்.இஸ்மாயில் உட்பட ஏனைய நிருவாக உறுப்பினர்கள், உஸ்தாத்மார்களான கண்ணியத்திற்குரிய பைசால் மௌலவி மற்றும் முபாறக் மௌலவி, கண்ணியத்திற்குரிய உலமாக்கள், மாணவர்கள், எம்.சீ.எம்.இஸ்மாயில், பவுண்டேசன் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், மஹல்லாவாசிகள், ஊர்பிரமுகர்கள் என பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# டயக்கோனியா அமைப்பின் பிராந்தியத் தொடர்பாடல் அதிகாரி இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு விஜயம்

(நூருல் ஹுதா உமர்)

டயக்கோனியா அமைப்பின் ஆசியப் பிராந்தியத்தின் ஐந்து நாடுகளுக்கும், மத்திய கிழக்கில் உள்ள மூன்று நாடுகளுக்கும் பொறுப்பான தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த டயக்கோனியா அமைப்பின் பிராந்தியத் தொடர்பாடல் அதிகாரி திருமதி வனீவ்னா தங்சத்தியன் ரப்ஹுப் (ரீனா) கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் அவர்களின் அழைப்பின் பேரில் நேற்றைய தினம் பாடசாலைக்குச் சென்றிருந்தார்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, மற்றும் டயகோனியா அமைப்பின் ஆதரவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட சிறுவர் சமாதானப் பூங்கா, மற்றும் பாடசாலையின் ஒரு பகுதியாக இயங்கி வரும் “கிரீன்வீச்” ஆங்கில பாலர் பாடசாலை போன்றவற்றையும் அவர் பார்வையிட்டதோடு, கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களின் முன்னேற்ற நிலைமைகள் பற்றியும் அறிந்துகொண்டார். இந்நிகழ்வில், டயக்கோனியா நிறுவனத்தின் இலங்கைக்கான செயற்திட்ட முகாமையாளர் திருமதி நிஷாந்தினி மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# தம்பிலுவில் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் கடலினால் காவு



(காரைதீவு சகா)

திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பை அடுத்து இன்று அதிகாலை தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் கடலுக்குள் காவு கொள்ளப்பட்டுள்ளது.

தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் சேதமாக்கப்பட்டு சமாதியும், சிவன்சிலையும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களாக அங்கு இடம்பெற்று வந்த மோசமான கடலரிப்பால் திருக்கோவில் சித்திர வேலாயுதசுவாமி ஆலயச் சூழல் மற்றும் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் பாரிய அபாயம் நிலவிவந்தது.

குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் இதனை அறிந்து உடனடியாக பிரதேச செயலாளருக்கும் கடலோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே.துளசிதாசனுக்கும் அறிவித்திருந்தார்.

மாகாணப் பணிப்பாளர் எந்திரி கே.துளசிதாசன் உடனடியாகச் செயல்பட்டு 100 மண் மூடைகளை ஏலவே பரப்பி, எதிர்வரும் ஆறாம் திகதி திங்கட்கிழமை கல்லணை போடுவதற்குத் தயாராக இருந்த வேளையில், இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.



அந்தப் பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் இதுவரை கடலரிப்பால் கொள்ளப்பட்டிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# கிராம சேவர்கள் சனத் தொகைக் கணக்கெடுப்பு பணிப் புறக்கணிப்பு பிறருக்குத் தகவல்களைக் கொடுக்க வேண்டாம் என சங்கம் வேண்டுகோள்

"சனத்தொகைக் கணக்கெடுக்கும் பணியை 14 நாட்களுக்கு நிறுத்தி வைத்துள்ளோம். உங்கள் வீடுகளுக்கு அல்லது வியாபார ஸ்தலங்களுக்கு வருகின்ற கிராம சேவைகர்கள் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு எவ்வித தகவலையும் விபரங்களையும் வேண்டாம்", என இலங்கை கிராம சேவகர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜரத்ன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், "கிராம சேவர்கள் வீடு வீடாக சென்று சனத் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்வதுண்டு, ஆனால் இந்த நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை போதுமானதாக இல்லை. எனவே, சனத் தொகை கணக்கெடுக்கும் பணியை 14 நாட்களுக்கு நிறுத்தி வைத்துள்ளோம். இதனால், மேற்படி பணியை வேறொரு தனிப்பட்ட வேறு குழுவொன்றிடம் அரசாங்கம் ஒப்படைக்கப் போகின்றது என அறிகின்றோம்.

தனிப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வீடுகளுக்கு அல்லது வியாபார ஸ்தலங்களுக்கு வருகின்ற கிராம சேவைகர்கள் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு எவ்விதமான விபரங்களையும் வழங்க வேண்டாம் என மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்" என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "பிரச்சினைகள் தொடர்பில் நிதியமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் அது தொடர்பில் கவனம் செலுத்தாத காரணத்தினால் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கிராம சேவகர்களின் போக்குவரத்திற்கான பெற்றோல் கொடுப்பனவாக மாதத்திற்கு ரூபாய் 600 மாத்திரமே வழங்கப்படுகின்றது. அத்துடன் இன்னும் சில இதர கொடுப்பனவுகளும் நியாயமாக வழங்கப்படுவதில்லை. இவ்வாறு பல பிரச்சனைகள் உள்ளன. இதற்குத் தீர்வு காணும் வரை 14 நாட்களுக்கு சனத்தொகை தொகை கணக்கெடுப்பு பணிகளில் இருந்து விலக முடிவு செய்துள்ளோம்.

இந்நிலையிலேயே நமது கோரிக்கைகளை கவனத்திற் கொள்ளாமல், சனத் தொகை கணக்கெடுப்புப் பணியை வேறு ஆட்கள் மூலம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது" எனவும் குறிப்பிட்டார். (ரெந-06)

புதிய பொலிஸ் மா அதிபர் யார்?

# விக்கிரமரத்னவின் பதவிக்காலம் மீண்டும் நேற்றுடன் முடிவடைந்தது



பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் மூன்று வாரங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்த பதவிக் காலம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

எனினும், இது வரையில் புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன ஓய்வு பெற்ற பின்னர் 3 சந்தர்ப்பங்களில் அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. இரண்டு சந்தர்ப்பங்களில், அரசாங்கம் தலா 3 மாதங்களுக்கு அவரது சேவையை நீடித்ததுடன் கடைசியாக 3 வார காலத்திற்கு நீடிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்றுடன் அவரது மூன்றாவது பதவிக் காலமும் மீண்டும் முடிவடைந்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் நியமனத்துக்கு, பொலிஸ்துறையின் மூன்று மூத்த அதிகாரிகளின் பெயர்கள் அரசியலமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஆனால் இதுவரை அதற்கு பெயர் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரெந-05)

# இலங்கைச் சுங்கத்திற்கு கடந்த மாதம் 109 பில்லியன் வருமானம் கிடைத்தது



இலங்கைச் சுங்கத்தால் கடந்த மாதம் (ஒக்டோபர்) 109 பில்லியன் ரூபாய்க்கு மேல் வரி வருவாய் கிடைத்துள்ளது, என சுங்கத்துறை ஊடகபேச்சாளரும் சுங்கப் பணிப்பாளருமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இது ஒரு மாதத்தில் இதுவரை கிடைத்த அதிகூடிய சுங்க வருமானம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், நெறிப்படுத்தப்பட்ட வரி வசூலிப்பு செயல்முறை மற்றும் திறமையான தொழிற்பாடு ஆகியனவே இவ்வாறு வருவாய் அதிகரிப்பதற்கான முக்கியக் காரணம் எனவும், இந்த ஆண்டு மொத்த சுங்க வருவாய் 925 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ரெந-07)

# காடுகளை விரிவாக்கும் நோக்கில் ஒரு லட்சம் மரவிதைகள் ஹெலியிலிருந்து தரையில் தூவப்பட்டன

## மர விதை வெடிகுண்டு நடவடிக்கை என பெயராம்!



சுமார் ஒரு லட்சம் மர விதைகளை வானிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் நிலம் நோக்கி தூவிவிடும் நிகழ்வொன்று கடந்த திங்கட்கிழமை அனுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் காடுகளின் எண்ணிக்கையை அதிகரித்து, தற்போதுள்ள காடுகளின் தரத்தை மேம்படுத்துவதுடன், வன விலங்குகளுக்கான வாழ்விடங்களை விரிவாக்கி, வன விலங்குகள் கிராமங்களுக்குள் புகுந்து தாக்குவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம், நுவரகம் செயலகப் பிரிவில் உள்ள கடுகம்பாளையகம எனும் காட்டின் 40 ஏக்கர் (16 ஹெக்டேர்) பரப்பளவில் 80,000 ற்கும் மேற்பட்ட வேப்பம் மற்றும் வீரை உட்பட இன்னும் பல மரங்களின் விதைகள் இவ்வாறு ஹெலிகொப்டர் மூலம் தரையில் தூவப்பட்டதுடன், இதற்கு எட்டாவது தேசிய வானூர்தி விதை வெடிகுண்டு நடவடிக்கை எனவும் பெயரிடப்பட்டிருந்தது.

வனவியல்துறைப் பணிப்பாளர் ஜெனரல் கே.எம். பண்டாரவின் வழிகாட்டலிலும், மாவட்ட வன அதிகாரி ஹேமந்த விஜேரத்னவின் மேற்பார்வையிலும், அனுராதபுரம் தள வன அதிகாரி சுமித் சுவாரிஸின் ஒருங்கிணைப்பின் கீழும் விமானப்படைத் தளபதி உதேனி ராஜபக்ஷ உட்பட இன்னும் பல விமானப்படை அதிகாரிகளின் முன்னிலையில் இவ்வாறு விதை குண்டுகள் வீசப்பட்ட நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரெந-04)

# மின்சார வாகனங்கள் சுங்கத்தில் தடுப்பு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சுற்றறிக்கையின்படி, இலங்கையில் அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரிப்பதில் பங்களிப்புச் செலுத்திய, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு சட்டபூர்வ அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இறக்குமதி செய்யப்பட்ட ஏழு மின்சார வாகனங்களை சுங்கத்துறை காவலில் தடுத்து வைத்திருப்பதற்கு சுங்கத்துறைப் பணிப்பாளர் எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த முதலாம் திகதி இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்ட ஏழு மின்சார வாகனங்களை இவ்வாறு சுங்கத் திணைக்களத்தில் தடுத்துவைத்தமைக்கு எதிராக 'ஓவர்லாண்ட் ஆட்டோமொபைல் பிரைவேட்' நிறுவனம் சமர்ப்பித்த மனுவைப் பரிசீலித்த நீதியரசர்கள் நிசங்க பந்துல கருணாரத்ன மற்றும் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனுதாரர், நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் தஹம் பெரேரா அல்லது நிறுவனத்தின் பிரதிநிதிகள் எவரையும் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் மற்றொரு இடைக்கால உத்தரவையும் நீதிபதி குழுவினர் பிறப்பித்துள்ளார்.

மனுதாரர் நிறுவனம் சார்பில் முன்னிலையாகிய ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, தனது மனுதாரர் வாகன இறக்குமதியை நேர்மையான முறையில் கையாண்டதாகவும், சுங்கத்துடனும் நம்பகமான முறையில் நடந்து கொண்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 2022 ஒகஸ்ட் 31 ஆம் திகதி யன்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கைக்கமையவே மனுதாரர் தனது நிறுவனம் சார்பில் ஏழு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ததாகவும் ஆனால், அது சட்டவிரோதமானது எனக் கூறி அவை தொடர்பான ஆவணங்களை வழங்குவதற்கு சுங்கத்துறை மறுத்துவிட்டது என்றும் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கை சட்டத்திற்கு எதிரானது எனவும் இதைத் தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் மனுத்தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரெந-08)

# நல்லூர் ஆலய விஸ்வ பிரசன்னா குருக்களை பாராட்டினார் அமைச்சர் நிர்மலா சீதாராமன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பூசகர்களில் ஒருவரான விஸ்வ பிரசன்னா குருக்களை இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் புகழ்ந்து பராட்டினார்.

இந்தியாவின் நிதி மற்றும் கோர்ப்பரேட் விவகாரங்களுக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமன் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது அங்கு கூடியிருந்தவர்களிடம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பூசகரின் பெயர் என்ன?, என்று கேள்வி எழுப்பினார்.

அதன் பின்னர் பிரசன்னா குருக்கள் உலகளவில் தற்போது ஹீரோ என்றார். ஆலய மஹோற்சவத்தின் போது கட்டியம் கூறுவதையும் புகழ்ந்து பராட்டினார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் 25 நாள் மஹோற்சவத்தின் போது நடைபெறும் ஒருமுகத் திருவிழாவில்

விஸ்வ பிரசன்னா குருக்களின் கணீர்க் குரலில் கட்டியம் சொல்லப்படும். அது சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய அளவில் வைரலாபியமை குறிப்பிடத்தக்கது. (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2023இல் வெளியிடப்பெற்றது.